# கலங்கரை விளக்கம் மெட்ரோ மண் பரிசோதனை துவங்கியது



■ ராயப்பேட்டை, வெஸ்ட் காட் சாலையில், மெட்ரோ ரயில் பணிக்கான மண் பரிசோதனை நடந்து வருகிறது.

**சென்னை, டிச. 25–**

கோயம்பேடு – கலங்கரை விளக்கம் மெட்ரோ ரயில் பாதைக்கு, ராயப்பேட்டை, மணிக்கூண்டு அருகே, வெஸ்ட் காட் சாலையில், நேற்று மண் பரிசோதனை நடத்தப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்தில், கோயம்பேடு– கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இப்பாதை முழுவதும், சுரங்கத்தில் அமைய உள்ளது. மொத்தம், 20 நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. இப்பாதைக்கான மண் பரிசோதனை பணி, தற்போது துவங்கப்பட்டுள்ளது.

ராயப்பேட்டை, ஒயிட்ஸ் சாலை மற்றும் மணிகூண்டு அருகே, வெஸ்ட் காட் சாலையில், நேற்று மண் பரிசோதனை துவங்கியது.

வெஸ்ட் காட் சாலையில், நவீன இயந்திரங்களால், சாலை தோண்டப்பட்டு, மண் பரிசோதனை நடந்து வருகிறது.

இந்த பணிகளை, இம்மாத இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.